# <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

OS No. 132/2014 31.03.2021 PW2

பெயர் : வீரராஜ் த/பெ: அப்பு

**<u>4 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

என் அத்தையான 4 ம் பிரதிவாதி கோசலை என்பவர் தான் என் பாட்டியை கட்டியப்படுத்தி உயில் எழுதி வாங்கிவிட்டார் என நான் சொல்லியுள்ள சங்கதி பொய் என்றால் சரியல்ல. அமரவதி தான் தன் விருப்பத்தின் அடிப்படையில் சுய புத்தியுடன் 4 ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி அமரவதி இறந்துவிட்டார் என்றால் ஆமாம். அமரவதி இறந்தற்கு பின்னிட்டு 10.08.2001 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் நடைமுறைப்படுத்தப்பட்டு அமலுக்கு வந்துவிட்டது என்று சொன்னால் இல்லை. 10.05.2003 ம் தேதியன்று 4 ம் பிரதிவாதி பெயருக்கு தாவா சொத்துக்கள் பொறுத்து பட்டா மறுதல் ஏற்பட்டு விட்டது என்றால் இல்லை. வழக்கு சொத்தில் அமைந்துள்ள வீட்டிற்கு வீட்டு வரி ரசீது, மின்கட்டணம் ரசீது, தண்ணீர் கட்டண ரசீது அனைத்தும் 4 ம் பிரதிவாதி பெருக்கு மாற்றப்பட்டு விட்டது என்றால் அது போர்ஜரி செய்து வாங்கப்பட்டதாகும். இரண்டு தாவா சொத்தின் உரிமை மூலம் தனிப்பட்ட வகையில் 4 ம் பிரதிவாதி கோசலைக்கு மட்டும் ஏற்பட்டுள்ளது என்றால் இல்லை. அது பொது சொத்தாக உள்ளது. ஆனால், வீட்டை பயன்படுத்தாமல் பூட்டி வைத்திருக்கிறோம். அவ்வாறு, வீட்டு பூட்டி வைத்திருக்கோம் என்ற விவரத்தை இவ்வழக்கில் எழுதி போட்டுவுள்ளேனா என்றால் யாரும் கேட்காததால் நான் அது பற்றி கூறவில்லை. நான் பொய்யுரைக்கிறேன் என்றும் நாளது வரை வீடு 4 ம் பிரதிவாதியின் கோசலையின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் இல்லை. நாகம்மாள், கவிதா, சிவக்குமார் ஆகிய மூவரும் என்னுடன் உறவுடன் தான் இருந்து வருகிறார் என்றால் நல்லது, கெட்டது என்றால் நாங்கள் செல்லுவோம், வருவோம் மற்றப்படி பேசுவது இல்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 163/2014 என்ற வழக்கு பாகப் பிரிவினைக்காக போட்டுள்ளார்கள் என்றால் குறிப்பாக வழக்கு சொத்தை மறைத்து போட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 14 வருடங்கள் கழித்து கோசலை சுவாதீனத்தில் உள்ள 1 ம் அயிட்ட சொத்தை பெறுத்து பாகப்பிரிவினை கேட்டு நாங்கள் பொய் வழக்கு போட்டுளோம் என்றால் இல்லை. 4 ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்டுள்ள 10.08.2001 ம் தேதிய உயில் ஆவணம் செல்லாது என்று கேள்வி எழுப்ப எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு உரிமை உண்டு. 2 ம் அயிட்ட சொத்து சிங்கிரிப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் ஆமாம். அந்த சொத்தை

பொறுத்து 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கு 4ம் பிரதிவாதி எழுதி கொடுத்த 13.07.2011ம் தேதிய கிரய ஆவணம் சட்டப்படியான ஆவணம் என்று சொன்னால் தவறு. அதில் வேறு சர்வே எண் போட்டு எழுதி கொடுத்துள்ளார்கள். 4ம் பிரதிவாதி எழுத, படிக்க தெரியாதவர் அதுபோல், வேறு சர்வே எண் போட்டு கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்றும் அவருடைய சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதுபோல், பொய்யுரைக்கிறேன் என்றால் 4ம் பிரதிவாதிக்கு எழுத, படிக்க தெரியும். அவர் 8ம் வகுப்பு படித்துள்ளார். 4ம் பிரதிவாதியிடம், என்னுடைய அப்பா அப்பு ரூ. 1 லட்சம் கடனாக பெற்றுக் கொண்டார் என்றும் அதை 4ம் பிரதிவாதி 2013ல் திருப்பி கேட்டபோது 4ம் பிரதிவாதிக்கு தொந்தரவு கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நான் பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் அதுபோல் சம்பவம் நடக்கவில்லை. கோசலயிடம் என் அப்பா வாங்கிய கடனை 2013ல் கேட்டபோது கடனையும் இல்லை என்று சொல்லிவிட்டு, மேற்படி 4ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள தனிப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இதுபோல் பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. என் அப்பா வருவாய் துறையில் வேலை செய்து வருகிறார். 4ம் பிரதிவாதி கல் உடைக்கும் வேலை செய்து வருகிறார். அவரிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இந்த விவரத்தை என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. யாரும் கேட்டகாததால் எழுதி போடவில்லை. பாகம் கேட்க எனக்கு அருகதை இல்லை என்றும், என் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

sd/Thiru.M. Balamurugan
சார்பு நீதிபதி, மேட்டூர்.